DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.43/2025**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலைச்செல்வன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பாஸ்கரசேதுபதி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று மானாமதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 15.11.2024 ம் தேதி தேகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது நான் மற்றும் செந்தாமரைக்கண்ணன், சென்பகவேல் ஆகியோர்களுடம் ரோந்து சென்றபோது தச்சவயல் பாலம் அருகே மது விற்பதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு காலை 9.30 மணிக்கு சென்றபோது அங்கு சந்தேகத்திற்கிடமான நபரை பிடித்து விசாரிக்க தன்னுடைய பெயர் கருப்புசாமி என்றும் தன்னுடைய முகவரியையும் குறிப்பிட்டார். அவரிடம் இருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது 180 மில்லி அளவுள்ள 27 express

brandy பாட்டில்கள் இருந்தது. அவரை விசாரிக்க மது கடையில் இருந்து வாங்கி சட்டத்துக்கு புறம்பாக விற்ற வைத்திருந்ததாக தெரிவித்ததன்பேரில் அவர் வைத்திருந்த மது பாட்டில்களை தலைமைக் காவலரை சாட்சியாக வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் காவல் நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண்.265/2024, பிரிவுகள் 4(1)(c) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்த சட்டம்-2024 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரியை கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (**மேற்படி படிவம் 91 அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) (**PR.40/2025 ல் கண்ட 180 மில்லி அளவுள்ள 27 express brandy பாட்டில்கள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து பிரிவுகள் 4(1)(c) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்த சட்டம்-2024 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் எந்த இடத்தில் ரோந்து பணியில் இருந்தபோது தகவல் கிடைத்தது என்றால், தச்சவயல் பாலம் அருகில்தான். நாங்கள் ரோந்து பணிக்கு 3 பேரும் தனித்தனி இரு சக்கர வாகனத்தில் சென்றோம். தச்சவயல் பாலத்தின் கீழே இரண்டு பக்கமும் வீடுகள் உள்ளது என்றால் இல்லை, தள்ளிதான் உள்ளது. தச்சவயல் பாலத்திலிருந்து ஒத்தக்கடை வந்தால் மதுபான கடை உள்ளது என்றால் சரிதான். எதிரி எந்த மது பான கடையில் மது பாட்டில்கள் வாங்கினார் என்று என்னுடைய விசாரணையில் தெரிய

வந்ததா என்றால் இல்லை, முதல்நாளே வாங்கி வைத்துவிட்டதாக சொன்னார். அத்தாட்சி மகஜரை நான்தான் கைப்பட எழுதி தயார் செய்தேன். கிராம நிர்வாக அதிகாரியையோ, கிராம உதவியாளரையோ இந்த வழக்கில் சாட்சிகளாக அழைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மது பாட்டில்களை விற்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வித மதுபாட்டில்களும் விற்பனை செய்வதற்காக வைத்துக்கொள்ளவில்லை என்றும் என்னுடைய மேல்அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க புள்ளி விபரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிவகங்கை மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் பிரிவு உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.